**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW1**

Deposition of the witness of **LW1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ரகுவரன் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.ஆறுமுகம் | Occupation | நகைக்கடையில் வேலை |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 31 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 8146 1664 7319 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.02.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆற்காட்டிலுள்ள ஒரு நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் எனக்கு தெரியாது. எங்கள் ஊர் சர்வந்தாங்கல் கிராமத்தில் கடந்த 27.07.2021-ம் தேதி நெல்லியம்மன் கோவில் திருவிழாவின் போது அன்றைய தினம் இரவில் சாமி ஊர்வலத்தின் போது நான் உட்பட என் நண்பர்கள், ஊர்க்காரர்கள் மொத்தம் சுமார் 100 பேர் நடனம் ஆடிக் கொண்டு சென்றோம். அந்த சமயத்தில் வெளியூரை சேர்ந்த சுமார் 50 நபர்கள் எங்கள் ஊர்காரர்களுடன் தகராறு செய்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் என் சித்தப்பா நாகேந்திரன் என்பவர் கீழே விழுந்ததில், கீழே உடைந்துகிடந்த மதுபாட்டில்கள் அவரது கழுத்தில் பட்டதால் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த சம்பவத்தை தொடர்ந்து என் வீட்டில் என் குடும்பத்தினருடன் ஏற்பட்ட தகராறில் நான் எங்கள் வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைத்தால் எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் காயம்பட்ட என் சித்தப்பா நாகேந்திரன் என்பவரை அவரது குடும்பத்தினர் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். எனக்கு என் வீட்டில் ஏற்பட்ட காயத்திற்காக அதே மருத்துவமனையில் நான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என் சித்தப்பா நாகேந்திரனை மருத்துவமனையில் சேர்த்த போதே அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த

போது ஆற்காடு தாலுக்கா காவல் நிலைய போலிசார் என்னிடம் ஒரு எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் கேட்டதால் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள என் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் திருவிழாவின் போது ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்பதை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்த போதும் இதை தான் சொன்னேன்.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எங்கள் கிராமத்தில் 27.07.2021–ம் தேதி நடந்த திருவிழாவின் சாமி ஊர்வலத்தில் ஊர்க்காரர்களுடன் நானும் நடந்து வந்ததாகவும், எங்கள் கிராமத்தை சேர்ந்த கிரிவாசன் என்பவருடன் இருந்த 4 பேர் திருவிழாவில் நடனம் ஆடியதாகவும், அதற்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த நாகேந்திரனும், கிரிவாசனிடம் அவருடன் இருந்த நபர்கள் யார் என்று கேட்டதாகவும், அதற்கு கிரிவாசன் தன்னுடன் படிக்கும் நண்பர்கள் என்றும், அவர்கள் ராமநாதபுரம் மோட்டுரை சேர்ந்த அரிஷ், ஹேமபிரசாத், அன்பரசன் (இளஞ்சிறார்) மற்றும் கிருஷ்ணாவரம் கூட்ரோட்டை சேர்ந்த கார்த்தி (எ) கேசவன் என்றும், அவர்களை திருவிழாவிற்காக தான் அழைத்து வந்ததாக கூறியதாகவும், அதற்கு நானும், நாகேந்திரனும், கிரிவாசனிடம் நம்ம ஊர் திருவிழாவில் வெளியூர்காரர்கள் நடனம் ஆடக் கூடாது என்று கூறியதாகவும், அதற்கு கிரிவாசன் நீங்கள் என்னடா சொல்றது போங்கடா என்று கூறியதாகவும், அவருடன் வந்த 4 பேரையும் பார்த்து நீங்கள் நடனம் ஆடுங்கடா என்று கூறியதாகவும், அதை பார்த்த ஊர்க்காரர்கள் கிரிவாசனிடம் நம்ம ஊர் திருவிழாவில் வெளியூர்காரர்கள் நடனம் ஆடக் கூடாது என்று கூறியதாகவும், அப்போது கிரிவாசனும், அரிஷ், ஹேமபிரசாத் மூவரும் எங்களை பார்த்து அசிங்கமாக பேசி உங்களை என்ன பன்றோம் பாருங்கடா என்று சொல்லிக்கொண்டே எங்கள் ஊர் பேருந்து நிலையம் அருகே சென்றதாகவும், இரவு 9.00 மணியளவில் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த கிரிவாசன் மீண்டும் எங்களிடம் தகராறு செய்தார் என்றும், எனக்கு கோபம் வந்து என்னடா சொல்ற என்று சொல்லி பேருந்து நிலையம் நிழற்குடைக்கு உள்ளே சென்ற போது கிரிவாசன், அவருடன் வந்த நபர்களிடம் இவன் உயிரோடு இருக்க கூடாது டா, ஊர்க்காரர்கள் முன்னாடி என் மானத்தை வாங்கிவிட்டான், இவனை போட்டுத்தள்ளுங்கடா என்று சொன்னதும் ஹேமபிரசாத் பேருந்து நிலையத்தில்

இருந்த காலி கண்ணாடி பிராந்தி பாட்டிலை உடைத்து என்னை குத்த வந்ததை பார்த்து நாகேந்திரன் தடுக்க வந்த போது ஹேமபிரசாத் நாகேந்திரன் வலது பக்க கழுத்தில் பாட்டிலால் ஓங்கி குத்தியதாகவும், நாகேந்திரன் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்ததாகவும், அவரை தூக்க சென்ற போது கிரிவாசனும், அவருடன் இருந்த அரிஷ், அன்பரசன் ஆகியோர் இவனையும் கொலை செய்யுங்கடா என்று சொன்னவுடன் கார்த்தி பேருந்து நிலையத்தில் இருந்த வேறு கண்ணாடி பாட்டிலை உடைத்து என்னை குத்த வந்த போது நான் தடுத்ததால் எனக்கு இடது கை மணிக்கட்டில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், இதை பார்த்த எங்கள் கிராமத்தை சேர்ந்த கிருஷ்ணன், ராமதாஸ் ஆகியோர் கூச்சல் போட்டவுடன் அடிபட்ட நாகேந்திரனை தூக்கிச் சென்றதாகவும், கிரிவாசனும், அவருடைய நண்பர்களும் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், என்னை என் குடும்பத்தினர் இராணிப்பேட்டை, எஸ்.எம்.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், திருவிழாவில் நடனம் ஆடக் கூடாது என்று சொன்னதால் நாகேந்திரனை பிராந்தி பாட்டிலால் குத்தி கொலை செய்ததாகவும், எனக்கும் ரத்தக்காயம் ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து போது ஆற்காடு கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet